# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 10 ம் தேதி, வெள்ளிகிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆனி மாதம் 26 ஆம் நாள்
CC No.43/2018
(CNR No: TNAL070002512018)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 386/2016. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | தங்கமணி (37/2026) த/பெ.சாமிக்கண்ணு,<br>காலனி தெரு, உஞ்சினி. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் | | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் | | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 25.05.2016 | | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 25.05.2016 | | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | |
| | | | 31.05.2016 | 31.05.2016<br>(காவல் நிலைய பிணை) | |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 30.05.2018 | | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் குறித்து வினவிய நாள் | : | 30.06.2022 | | |
| 8 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 25.07.2022 | 25.07.2022 |
| | | | அ.சா.2 | 25.07.2022 | 25.07.2022 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.3 | 9.12.2022 | 19.12.2022 |
| | | | அ.சா.4 | 22.02.2023 | 22.02.2023 |
| | | | அ.சா.5 | 22.02.2023 | 22.02.2023 |
| | | | அ.சா.6 | 22.02.2023 | 22.02.2023 |
| | | | அ.சா.7 | 24.02.2023 | 24.02.2023 |
| | | | அ.சா.8 | 09.08.2023 | 09.08.2023 |
| | | | அ.சா.9 | 21.08.2023 | 21.08.2023 |
| | | | அ.சா.10 | 21.02.2024 | 21.02.2024 |
| | | | அ.சா.11 | 16.10.2025 | 16.10.2025 |
| 9 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 02.07.2026 | | |

இவ்வழக்கு 01.06.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 10.07.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி.C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகிவும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 24.05.2016ம் தேதி நள்ளிரவு 12.30 மணியளவில் எதிரி தங்கமணி என்பவர் சாட்சிகள் மணிமாறன், மணிவண்ணன், ராஜா, இறந்துபோன விஜய் (எ) அம்பேத்ராஜ் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு சூரியமணல் செல்வராஜ் என்பவரது வீட்டிற்கு எதிரில் உடையார்பாளையத்திலிருந்து ஜெயங்கொண்டம் மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்றபோது திடீரென்று TATA ACEன் பின்பக்க டயர் வெடித்ததில் விஜய் (எ) அம்பேத்ராஜ் தூக்கி வீசப்பட்டு பின்னந்தலையில் பலத்த அடிபட்டு காயமும், மேல் உதடு கிழிந்தும், வலது முழங்கையில் காயங்கள் ஏற்பட்டு இறந்துள்ளார் என்றும், மேலும்

சாட்சிகள் மணிமாறன், மணிவண்ணன் ஆகியோர்களுக்கு சொற்பகாயத்தை ஏற்படுத்தியுள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் குற்றத்தின் சாராம்சம் குறித்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்க விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-**

7. அ.சா.1 மணிமாறன் தனது சாட்சியத்தில் 24.05.2016ம் தேதி இரவு 12.30 மணியளவில் டாடா ஏசி வாகனத்தில் தங்கமணி என்பவரும் வாகனத்தை ஓட்டிய டிரைவருக்கு அருகில் மணிவண்ணன், ராஜா என்பவரும் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், தானும் இறந்த விஜய் என்பவரும் டாடா ஏசியின் பின்புறம் நின்றுக்கொண்டிருந்தோம் என்றும், உடையார்பாளையத்திலிருந்து சூரியமணல் நோக்கி சென்றுக்கொண்டிருந்தபோது அப்போது டாடா ஏசி வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்து, விபத்து ஏற்பட்டு, வண்டி தூக்கி போடப்பட்டுவிட்டது என்றும், மேற்படி

விபத்தில் தனக்கு வலது கால், இடது பக்க கன்னம். இடது பக்கம் தோள்பட்டை, உடல் முழுவதும் அடிபட்டிருந்தது என்றும், விபத்தில் இறந்த விஜய்க்கு தலையின் பின்பக்கம் அடிபட்டடிருந்தது என்றும், தான் அடிபட்டவுடன் மயக்கமடைந்துவிட்டேன் என்றும், வாகனத்தில் இருந்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், தாங்கள் சென்ற டாடா ஏசி வாகனத்தை ஓட்டிவந்தவர் ஆஜர் எதிரி தங்கமணிதான் என்றும், பின்பு காயம் ஏற்பட்ட ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், தனக்கு காயம்பட்ட இடங்களில் தையல் போடப்பட்டிருந்தது என்றும், விபத்து நடந்த அடுத்த நாள் தனக்கு நினைவு வந்தவுடன், தங்களுடன் வாகனத்தில் வந்த விஜய் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள் என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 தான் கொடுத்ததுதான். என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 மணிவண்ணன் தனது சாட்சியத்தில், சுமார் ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 12.30 மணியளவில் உடையார்பாளையத்திலிருந்து ஜெயங்கொண்டம் நோக்கி வரும்போது சூரியமணல் அருகே தான், தங்கமணி, ராஜா, மணிமாறன், விஜய் ஆகியோர் டாடா ஏசி வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தோம் என்றும், விஜய், மணிமாறன் டாடா ஏசி வாகனத்தின் பின்பக்கம் நின்றுக்கொண்டிருந்ததாகவும் மற்ற நாங்கள் அனைவரும் வாகனத்தின் முன்பக்கம் உட்கார்ந்திருந்தோம் என்றும், தாங்கள் வந்த டாடா ஏசி வாகனத்தின் பதிவு எண் டிஎண் 61 இ 9182 என்றும், டாடா ஏசி வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்ததாகவும், அதனால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் வண்டி அப்செட்டாகி விட்டது என்றும், தனக்கு இடதுபக்க மேல் கையில் சதை பிய்ந்துவிட்டது என்றும், மணிமாறனுக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், எதிரி தங்கமணி. ராஜா ஆகியோருக்கும் உடல் முழுவதும் உள்காயம் ஏற்பட்டிருந்தது என்றும், விஜய் என்பவருக்கு அடிபட்டு பின்பக்க தலையில் இருந்து இரத்தப்போக்கு இருந்தது என்றும், பின்னர் தங்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும், தாங்கள் அனைவரும் சிகிச்சை பெற்றோம் என்றும், காயம்பட்ட

விஜய் என்பவரை மருத்துவர்கள் பரிசோதனை செய்து அவர் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள் என்றும், அவரை ஜெயங்கொண்டம் மருத்துவமனை சவக்கிடங்கின் முன்வைத்து பிரேத விசாரணை செய்தபோது தான் சிகிச்சையில் இருந்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 செந்தில்குமார் தனது சாட்சியத்தில், கடந்த 25.05.2016 ம் தேதியன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்தபோது காலை சுமார் 11.30 மணியளவில் ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளரிடமிருந்து, விஜய் (எ ) அம்பேத்ராஜ். என்பவரது சடலத்தை பிணக்கூறாய்வு செய்து, அறிக்கை அளிக்குமாறு காவலர் திரு.ஜெயபால் என்பவர் தன்னிடம் கடிதம் அளித்தார் என்றும், அதன்படி, அன்று நண்பகல் 12.00 மணியளவில் பிணவறைக்குச் சென்று, சடலத்தின் அங்க மச்ச அடையாளங்களை பதிவு செய்து பிணக்கூறாய்வை ஆரம்பித்தேன் என்றும், அதன் அறிக்கை கீழ்க்கண்டவாறு. மிதமான கட்டுடல் கொண்ட ஒரு ஆணின் சடலம் மல்லாந்த நிலையில் கைகள் அருகருகே வைத்து கிடத்தப்பட்டிருந்தது என்றும், பிணவிறைப்புத் தன்மை அனைத்து பாகங்களிலும் பரவியிருந்தது என்றும், கண்கள் பாதி திறந்த நிலையில் இருந்தது என்றும், வாய் பாதி திறந்த நிலையில், நாக்கு உள்ளிருந்தது மூக்கு, வாய், காதுகளிலிருந்து இரத்தம் வழிந்திருந்தது என்றும், வெளிப்புறகாயங்கள் 1) 4 × 3 × எலும்பின் ஆழம் கொண்ட கிழிந்த காயம் பின் மண்டையில் காணப்பட்டது. ii) 2 x 3 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் இடது முட்டியில் காணப்பட்டது. iii) 3 x 2 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் வலது புற முழங்கையில் காணப்பட்டது iv) உள்ளூறுப்பு பரிசோதனைகள், கழுத்து, நாவடி எலும்புகள் முழுமையாக காணப்பட்டது என்றும், மார்புக்கூட்டில் எலும்பு முறிவு எதுவும் இல்லை என்றும், நுரையீரல்களில் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது என்றும், இருதயம் நான்கு அறைகளிலும் காலியாக இருந்தது என்றும், வயிறு : இரைப்பையில் 200 கிராம் அளவுள்ள பாதி செரிமான நிலையிலுள்ள ஒரு திரவம் காணப்பட்டது என்றும், குறிப்பிட்ட எந்த வாடையும் இல்லை என்றும், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இரத்தம் தோய்ந்து காணப்பட்டது என்றும், சிறுநீர்ப்பை காலியா இருந்தது என்றும், விதை மற்றும் விதைப்பை காயங்கள் எதுவும் இல்லை என்றும், கபால பின் மண்டையில் சுமார் 5 செ.மீ. அளவுள்ள நீண்ட தெறித்த எலும்பு முறிவு காணப்பட்டது

என்றும், மூளை : 50 கிராம் அளவுள்ள இரத்தக்கட்டு பின் பகுதியில் காணப்பட்டது என்றும், பிணக்கூறாய்வானது அன்றைய தினம் மதியம் சுமார் 01.30 மணியளவில் முடித்து வைக்கப்பட்டது என்றும், இவருடைய இறப்பானது பிணக்கூறாய்விற்கு 6 லிருந்து 8 மணி நேரத்திற்கு முன்பாக நடந்திருக்க வாய்ப்புள்ளது என்றும், இவரது இறப்பானது மூளையில் ஏற்பட்ட அதீத அதிர்ச்சியினாலும், இரத்த இழப்பினாலும் ஏற்பட்டுள்ளது என்று அ.த.சா.ஆ.2 சான்றளித்துள்ளேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 சபரிநாதன் தனது சாட்சியத்தில், 24.05.2016ம் தேதி தான் வீட்டில் படுத்திருந்திருந்தபோது தனது தம்பி விஜய் (எ) அம்பேத்ராஜ் என்பவர் உடையார்பாளையத்தில் இருந்து ஜெயங்கொண்டத்திற்கு டாடா வாகனத்தில் வந்தபோது, விபத்து ஏற்பட்டதாகவும், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் தகவல் சொன்னார்கள் என்றும், தான் சென்று பார்த்தபோது தனது தம்பி தலையில் அடிபட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், ஜெயங்கொண்டம் மருத்துவமனை சவக்கிடங்கின் முன் வைத்து பிரேத பரிசோதனை செய்தார்கள் என்றும், தானும் உடனிருந்தேன் என்றும், இந்த விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. அ.சா.5 சக்திவேல் தனது சாட்சியத்தில், 24.05.2016ம் தேதி தான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது தனது சித்தப்பா போன் செய்து, எனது அண்ணன் விஜய் (எ) அம்பேத்ராஜ் என்பவர் உடையார்பாளையத்தில் இருந்து ஜெயங்கொண்டத்திற்கு டாடா ஏசி வாகனத்தில் வந்தபோது, விபத்து ஏற்பட்டதாகவும், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் தகவல் சொன்னார் என்றும், தலையில் அடிபட்டு 2) நான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும், அங்கு தனது அண்ணன் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், ஜெயங்கொண்டம் மருத்துவமனை சவக்கிடங்கின் முன் வைத்து பிரேத பரிசோதனை செய்தார்கள் என்றும், தானும் உடனிருந்தேன் என்றும், இந்த விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.6 ராஜா தனது சாட்சியத்தில், 2016ம் வருடம் 5 வது மாதம், தேதி நினைவில்லை ஒரு நாள், இரவு 08.00 மணிமுதல் 08.30 மணியளவில் உடையார்பாளையத்தில் இருந்து ஜெயங்கொண்டத்திற்கு டாடா ஏசியில் தானும், எதிரி

தங்கமணி, மற்றும் மணிமாறன், விஜய் ஆகியோர் சென்றோம் என்றும், தாங்கள் சென்ற வாகனத்தின் டாடா ஏசி வாகனத்தின் டயர் வெடித்துவிட்டது என்றும், தான், மணிவண்ணன், எதிரி தங்கமணி ஆகியோர்கள் வாகனத்தின் முன்பக்கம் அமர்ந்திருந்தோம் என்றும், விஜய் டாடா ஏசி வாகனத்தில் பின்புறம் நின்றுக்கொண்டிருந்தபோது சூரியமணலில் பெட்ரோல் பங்க் அருகே டாடா ஏசியின் டயர் வெடித்து, வண்டி சாய்ந்துவிட்டது என்றும், பின்னால் நின்றிருந்த விஜய் கீழே விழுந்துவிட்டார் என்றும், அவருக்கு தலையில் அடிபட்டது என்றும், தாங்கள் அந்த டாடா ஏசி வாகனத்திலேயே அவரை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு. விஜய் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள் என்றும், தனக்கு எந்த காயமும் இல்லை என்றும், மணிமாறனுக்கு காலில் அடிபட்டது என்றும், டாடா ஏசியை ஓட்டி வந்த எதிரி தங்கமணிக்கு உள்காயம் இருந்தது என்றும், இந்த விபத்திற்கு டாடா ஏசி வாகனத்தின் டயர் வெடித்ததுதான் காரணம் இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.7 சிவபிரகாசம் உஷா தனது சாட்சியத்தில் 25.05.2016 ம் தேதியன்று நடு இரவில் 01.20 மணியளவில் பழனியாண்டி மகன் மணிமாறன் என்பவர் சிகிச்சைக்காக தன்னிடம் வந்தார் என்றும், அதே தினத்தில் நள்ளிரவு 12.30 டாடா ஏசியில் மணியளவில், சூரியமணலில் செல்லும்போது, அது கவிழ்ந்து அடிபட்டதாக கூறினார் என்றும், அவரை பரிசோதனை செய்தபோது, கீழ்கண்ட காயங்கள் இருந்தது என்றும், i) வலது தொடையில் 8 x 2 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் i) முகத்தின் தாடையில் 2 x 2 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் iii) இடது கன்னத்தில் 3 × 3 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் iv) வலது கால் முட்டியில் 5 x 1/2 x 1/2 செ.மீ. அளவிலான கிழிந்த காயம்.v) வலது கால் முட்டியில் 4 x 4 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் vi) இடது கால் முட்டியில் 3x 3 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் vii) உடல் முழுவதும் வலியிருந்ததாகக் கூறினார் என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து, பின்பு மேல்சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன் என்றும், அங்கு அவருக்கு வழங்கிய கருத்துரையின்படி அனைத்து காயங்களும் சொற்பகாயங்கள் என்று சான்று அ.த.சா.ஆ.3 வழங்கினார் என்றும், 25.05.2016 ம் தேதி

நள்ளிரவில் 01.15 மணிக்கு சூரியமணலில் சாமிக்கண்ணு மகன் மணிவண்ணன் என்பவர் சிகிச்சைக்கு தன்னிடம் வந்தார் என்றும், சூரியமணலில் டாடா ஏசியில் செல்லும்போது அடிபட்டதாக கூறினார். அவை பரிசோதனை செய்தபோது. கீழ்கண்ட காயங்கள் இருந்தது. i) வலது கை முட்டியில் 5 x 2 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம். ii) 6 x 2 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் iii) வலது கால் முட்டியில் 3 × 3 செ.மீ. அளவிலான சிராய்ப்பு காயம் iv) உடல் முழுவதும் வலியிருந்ததாக கூறினார் என்றும், அவரை உள்நோயாளியாக மேல்சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அனுமதித்து பின்பு பரிந்துரை செய்தேன் என்றும், அங்கு அவருக்கு வழங்கிய கருத்துரையின்படி அனைத்து காயங்களும் சொற்ப காயங்கள் என்று சான்று அ.த.சா.ஆ.4 வழங்கினேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.8 அன்பழகன் தனது சாட்சியத்தில் 2016 ம் வருடம் ஒருநாள் தன் மகன் டாடா ஏஸ் வாகனத்தில் மேற்படி விபத்தில் காயம்பட்ட நபர்களுடன் அவர்கள் பெயர் தனக்கு தெரியாது என்றும், சூரிய மணல் அருகே டாடா ஏஸ் வாகனம் சென்று கொண்டிருந்த வாகனம் பஞ்சரானதால் கீழே விழுந்து குதித்து அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக தனக்கு தகவல் சொன்னார்கள் என்றும், தான் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது மருத்துவர் தன் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், அவருடன் சென்றவர்களுக்கு என்ன ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும், தன் மகன் இறந்த அதிர்ச்சியில் அதுபற்றி தான் தெரிந்து கொள்ளவில்லை என்றும், ஜெயங்கொண்டம் மருத்துவமனையில் சவகிடங்கு முன்பு வைத்து தன் மகன் பிரேதத்தின்மீது பிரேத விசாரணை செய்தார்கள் என்றும், தானும் உடனிருந்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

15. அ.சா.9 செல்வம் தனது சாட்சியத்தில் கடந்த 25.05.2016 தேதி அரசு ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்தபோது ஜெயங்கொண்டம் மருத்துவமனையிலிருந்த வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மணிமாறன் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.386/2016.. ச/பி.279, 337 304(ஏ) இதசவின்படி வழக்கு பதிவு செய்து, வாதியின் புகார் மனுவுடன் அசல் முதல் தகவல் அறிக்கை அ.தசா.ஆ.5 இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற

நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன் என்றும், மேலும் வழக்கு கோப்பினை ஆய்வாளர் மேற்பார்வைக்கு வைத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

16. அ.சா.10 விஜயகுமார் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.த.சா.ஆ.6 தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்தை சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை ஜெயங்கொண்டம் போலீசார் சூரியமணல் பெட்ரோல் பங்க் அருகில் வந்து வரைபடம் வரைந்தபோது தானும் கொளஞ்சி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும், போலீசாரிடம் விசாரித்தபோது அந்த இடத்தில் நடந்த வாகன விபத்து தொடர்பாக போலீசார் அங்கு வந்து அந்த இடத்தை பார்வையிட்டார்கள் என்றும், அதற்கு சாட்சியாக தங்களிடம் கையொப்பம் பெற்றதாக கூறினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.11 வேலுசாமி தனது சாட்சியத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வம் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், கொளஞ்சி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் அ.த.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 தயார் செய்துள்ளேன் என்றும், சாட்சிகள் அன்பழகன், மணிவண்ணன், சபரிநாதன், சக்திவேல், ராஜா மற்றும் மகசர் சாட்சிகளான கொளஞ்சி, விஜயகுமார் ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றும், இவ்விபத்தில் விஜய் (எ) அம்பேத்ராஜ் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்ட காரணத்தினால், இவ்வழக்கில் இறந்துபோன விஜய் என்பவரின் பிரேதமானது ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன்பு இருந்ததால் பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் சார்வு செய்தும், பஞ்சாயத்தார் மற்றும் பிரேத விசாரணை சாட்சிகளான அன்பழகன், மணிவண்ணன், சபரிநாதன், சக்திவேல் முன்னிலையில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன்பு வைத்து, 25.05.2016ம் தேதி காலை 08.15 மணிமுதல் 10.30 மணிவரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.9 தயார் செய்துள்ளேன் என்றும், பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக காவலர் 115 ஜெயபால் என்பவர் மூலமாக பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும்,

இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகள் மணிவண்ணன் மற்றும் மணிமாறன் ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் திருமதி. உஷா சிவப்பிரகாசம் மற்றும் திரு.பரத் ஆகியோரை விசாரணை செய்து, காயச்சான்று பெற்று, வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். விஜய் (எ) அம்பேத் ராஜின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்த மருத்துவர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரணை செய்து, பிணக்கூறாய்வு சான்றிதழ் பெற்று அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றும், சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 31.05.2016 ம் தேதி 12.30 மணிக்கு ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் வைத்து, எதிரியை கைது செய்து, நிலைய பிணையில் விடுவித்துள்ளேன் என்றும், 01.06.2016 ம் தேதி இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட TN 61 E 9182 என்ற பதிவெண் கொண்ட டாடா ஏசி வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவரை விசாரணை செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.10 பெற்று, அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றும், பிரேத பரிசோதனை காவலர் ஜெயபால் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வம் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, இத்துடன் விசாரணையை முடித்து எதிரியின் மீது ச/பி.279, 337, 304(A)இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

18. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

19. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

20. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

**<u>தீர்வு</u>**

21. கடந்த 24.05.2016 ம் தேதி நள்ளிரவு 12.30 மணியளவில் எதிரியின் TATA ACE வாகனத்தில் எதிரி வாகனத்தை ஓட்ட அதில் அ.சா.1, அ.சா.2, அ.சா.6 மற்றும் விஜய் (எ) அம்பேத்ராஜ் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு சூரியமணல் செல்வராஜ் என்பவரது வீட்டிற்கு அருகில் உடையார்பாளையத்திலிருந்து ஜெயங்கொண்டம் செல்லும் மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவோகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்றபோது திடீரென்று TATA ACE ன் பின்பக்க டயர் வெடித்ததில் விஜய் (எ) அம்பேத்ராஜ் தூக்கி வீசப்பட்டு அவருக்கு பின்தலையில் பலத்த காயமும், மேல் உதடு கிழிந்தும், வலதுமுன் கையில் காயங்கள் ஏற்பட்டும் இறந்து போவதற்கும் அ.சா.1, அ.சா.2 ஆகியோருக்கு சொற்பகாயங்கள் ஏற்பட்டதற்கும் காரணமாக இருந்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

22. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கம் விதத்தில் அரசுதரப்பில் புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகவும், பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.2 ஆகவும், காயச்சான்றுகள் அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகசர் அ.த.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

23. எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினாரா? என்பது குறித்து இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், எதிரி ஓட்டி சென்ற வாகனத்தை பயணம் செய்த மணிமாறன் அ.சா.1 ஆகவும், மணிவண்ணன் அ.சா.2 ஆகவும், ராஜா அ.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 24.05.2016 ம் தேதி இரவு 12.30 மணியளவில் TATA ACE வாகனத்தில் தங்கமணி என்பவர் வாகனத்தை ஓட்ட அவருக்கு அருகில் மணிவண்ணனும், ராஜா என்பவரும் உட்கார்ந்திருந்தார்கள் என்றும், தானும் இறந்த விஜய் என்பவரும் TATA ACE ன் பின்புறம் நின்றுகொண்டிந்தோம் என்றும், உடையார்பாளையத்திலிருந்து சூரியமணல் சென்று கொண்டிருந்தபோது TATA ACE வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்து, விபத்து ஏற்பட்டு

வண்டி தூக்கி போடப்பட்டுவிட்டது என்றும், அந்த விபத்தில் தனக்கு வலது கால், இடதுபக்க கன்னம், இடதுபக்க தோள்பட்டை, உடல் முழுவதும் காயம் ஏற்பட்டதாகவும் விபத்தில் இறந்த விஜய்க்கு தலையின் பின்பக்கம் அடிபட்டு இருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

24. அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று எதிரியின் வாகனத்தின் தானும், ராஜா, மணிமாறன், விஜய் ஆகியோர் வந்து கொண்டிருந்தபோது TATA ACE வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்தது என்றும், அதனால் வாகனத்தை கட்டுபடுத்த முடியாமல் வண்டி அப்செட்டாகி விட்டது என்றும், அதில் தனக்கு இடதுபக்க மேல் கையில் சதை கிழிந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

25. அ.சா.6 தனது சாட்சியத்தில், எதிரியின் வாகனத்தின் தானும், மணிமாறன், விஜய் ஆகியோர் சென்றபோது தாங்கள் சென்ற TATA ACE வாகனத்தின் டயர் வெடித்து வண்டி சாய்ந்ததாக சாட்சியமளித்துள்ளார். விஜயின் பிரேத விசாரணை செய்த மருத்துவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தான் விஜயின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்தது குறித்தும், சான்று வழங்கியது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

26. அ.சா.4, அ.சா.5 மற்றும் அ.சா.8 இந்த வழக்கு விபத்தை கேள்விபட்டதாக சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு சிகிச்சை அளித்தது குறித்தும், அவர்களுக்கு ஏற்பட்ட காயம் குறித்தும் சாட்சியமளித்துள்ளார். அவர் கொடுத்த காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.7 ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்கையில் இந்த வழக்கு விபத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 க்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

27. இந்த வழக்கில் எதிரியின் வாகனத்தில் பயணம் செய்த அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6 ஐ தவிர வேறு சாட்சிகள் யாரும் இந்த வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே, அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6 ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் எதிரி அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ வாகனத்தை ஓட்டியதால் தான் மேற்படி வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்து விபத்து ஏற்பட்டதாக எந்த ஒரு சாட்சியத்தையும் முன் வைக்கவில்லை.

இந்த வழக்கு விபத்தானது மேற்படி வாகனத்தின் பின்பக்க டயர் வெடித்ததாலேயே ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. எனவே, இந்த விபத்திற்கு காரணம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பதை அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

28. முடிவாக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்ந நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

29. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

30. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 10ம் நாள் வெள்ளிகிழமை நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

**<u>அட்டவணை : –</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

அ.சா.1 – மணிமாறன்

அ.சா.2 – மணிவண்ணன்

அ.சா.3 – செந்தில்குமார்

அ.சா.4 – சபரிநாதன்

அ.சா.5 – சக்திவேல்

அ.சா.6 – ராஜா

அ.சா.7 – சிவபிரகாசம் உஷா

அ.சா.8 – அன்பழகன்

அ.சா.9 – செல்வம்

அ.சா.10 – விஜயகுமார்

அ.சா.11 – வேலுசாமி, காவல் ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.2 – பிணக்கூறாய்வு சான்றிதழ்

அ.த.சா.ஆ.3 – மணிமாறனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்று

அ.த.சா.ஆ.4 – மணிவண்ணனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்று

அ.த.சா.ஆ.5 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.6 – பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம்

அ.த.சா.ஆ.7 – பார்வை மகசர்

அ.த.சா.ஆ.8 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.9 – பிரேத விசாரணை அறிக்கை

அ.த.சா.ஆ.10 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 61 E 9182)

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u>** : இல்லை

**<u>குறிப்பு:</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(Sd/-P.Kanimozhi)

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.